முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் நகுலன் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

26.01.2019, சனிக்கிழமை

1. **ஞானவள்ளலே அரங்கா போற்றி**
   **ஞானிகளை வணங்கி மக்களெல்லாம்**
   **ஞானம் பெற வழிகாட்டும் தேசிகா**
   **ஞாலமதில் உன் பெருமை கூறி**
2. கூறியே ஒளி சூட்சும நூலை
   குறையிலா **விளம்பி கலை திங்கள்**
   **தெரியவே விய திகதி காரி வாரம்**
   **(விளம்பி வருடம் தை மாதம் 12ம் நாள் 26.01.2019, சனிக்கிழமை)**
   **தேசிகனுக்கு நகுலன் யானும் உரைப்பேன்**
3. உரைப்பேன் உலகோர் நலம் பெற
   உயர்வழி காட்டும் ஞானதேசிகன்
   அறம்தனை ஏற்பவர் எல்லாம்
   ஆறுமுகனார் அருள்பலம் அடைவர்
4. அடைவரே அரங்க ஞானி மூலம்
   ஆக்கமும் பிறவா பேறுக்கான
   சோடை தடைகளை வெல்வர்
   சுப்பிரமணியர் ஞானம் தேறி
5. தேறியே கலிகாலம் தன்னில்
   தெளிவு திடம் அரங்கன் அருள்பட
   வறுமை பசிபிணி வெல்வர்
   வளமான வாழ்வும் வல்லமையான தேகபலமும்
6. பலமான உறவும் சகல பாதுகாப்பும்
   பாலதண்டாயுதனை பணிபவரெல்லாம்
   சலனமற அடைவர் சிறப்பர்
   சற்குருவாய் விளங்கும் அரங்கன்
7. அரங்கன் திருவடி பணிந்துநல்
   அற்புதம் தரும் திருவடி தீட்சை பெற
   வரங்கள் விருப்ப வழி கண்டு
   வாழும் காலமே ஆனந்தம் பெறுவர்
8. ஆனந்த கதி அருளும் அரங்கா
   அஞ்சேல் என வந்து காக்கும்
   ஞானபண்டிதன் சக்தியாகவே உள்ள
   ஞானதேசிகா காலம் வென்ற குருவே
9. குருவே உன் கரம் பட்டநல்
   குறையிலா ஆசி பெற்ற குமரகிரி
   திருவருள் காட்டும் ஞானபீடம்
   தொடர்ந்து வந்து சேவை ஆற்றி

10. ஆற்றியே கோசாலை தொண்டு
அன்புடன் கோ பூசை கலந்து
மாற்றம் வேண்டி தருமம் செய்து
மண்ணுலகில் வரும் மக்களெல்லாம்

11. மக்களெல்லாம் பேரும் பேற்றுடன்
மரணம் வெல்லும் உயர்கதியுடன்
தேக்கமிலா ஞானயுக வாழ்வு பெறுவர்
தெரிவித்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் நகுலன் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

மக்களுக்கு ஞானத்தை அருளி காக்கும் ஞானவள்ளலே ஆறுமுக அரங்கமகா தேசிகனே ஞானிகளை வணங்கிட மக்களுக்கு உபதேசித்து ஞானிகளை மக்களெல்லாம் வணங்கிட வழிவகை செய்து ஞானிகளை வணங்கி ஞானம்பெற குருவாய் தாமே அமர்ந்து வழிகாட்டும் மகா குருவே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலகநலம் கருதி **விளம்பி வருடம் தை மாதம் 12ம் நாள் 26.01.2019, சனிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே நகுலன் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் நகுலன்.

உயர்ஞான வழிகாட்டும் ஞானதேசிகன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அறத்தினை ஏற்பவர்கள் எல்லாம் அரங்கன் செய்கின்ற தானதருமப் பணிகளிலே தொண்டுகள் செய்தும் பொருளுதவிகள் செய்தும் தர்மத்தினிலே பங்கு கொள்கின்றவர்கள் எல்லாம் முருகப்பெருமானின் அருளினைப் பெற்று அருள்பலத்தினை அடைவார்கள். ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் மூலமாக அவர்கள் ஆக்கமும் ஊக்கமும் பெற்று பிறவா பெருநிலையை அடைவதற்கு அருளாசிகளை பெறுவதோடு பிறவா பெருநிலையை அடைவதை தடுக்கும் தடைகளை எல்லாம் அரங்கனின் அருளால் வெல்வார்கள். முருகப்பெருமான் வகுத்த ஞானநெறிகளிலே சென்று கடைத்தேறி ஞானம் பெற்று கலிகாலத்திலும் சிறந்த தெளிவான சிந்தனையையும் அறிவையும் பெற்று மனோதிடத்தையும் ஆறுமுக அரங்கர் அருள்பட பெறுவதோடு அரங்கன் அருளினால் வறுமையை ஒழித்து பசிப்பிணியையும் வென்று சிறப்படைவார்கள். வளமான வாழ்வையும், வல்லமைமிக்க தேகபலமும், பலம்மிக்க சுற்றத்தையும், உறவுகளையும் பெறுவதோடு சகலவிதமான பாதுகாப்பையும் அவர்கள் பெற்று சிறப்பர்.

பாலதண்டாயுதன் முருகப்பெருமானின் திருவடிகளை பணிவோர் எல்லாம் அருள் பாதுகாப்பையும் நல்ல நட்பையும் பெறுவதோடு சலனமற்ற வாழ்வை வாழ்வர்.

கலியுக ஞானி யுகமாற்ற தலைவன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருவடி பணிந்து பயபக்தியுடன் அரங்கனிடத்து அற்புதங்களை தந்தருளும் திருவடி தீட்சைதனை பெற்றவர்களெல்லாம் வேண்டிய வரங்களை விரும்பியவாறு பெற்று வாழும் காலத்திலேயே சகலவளமும் பெற்று ஆனந்தமயமான வாழ்வினை வாழ்வார்கள்.

**ஆனந்த வாழ்வினை அருளும் அரங்கமகா தேசிகனே, அழைத்த அக்கணமே அன்பர்கள் தோன்றி அஞ்சேல் என காக்கும் ஞானபண்டிதனின் சக்தியாக உள்ள ஞானதேசிகனே அரங்கனே காலத்தை வென்ற மகா ஞானகுருவே உமது கரம்பட்ட நல்ஞானபூமியாம் உமது ஆசியினை குறையின்றி பெற்ற ஞானபூமியாம் குமரகிரி திருவருள் காட்டும் ஞானபீடத்தினில் தொடர்ந்து வருகை தந்து தொண்டுகளை செய்தும் கோசாலையில் தொண்டுகள் செய்யும் அன்புடன் கோபூசையில் கலந்து அவரவரின் வினை குறைந்திட மாற்றம் வேண்டி தருமங்களைச் செய்து வருகின்ற மக்களெல்லாம் பெரும்பேற்றினை பெறுவதுடன் மரணத்தை வெல்லும் உயர்நிலையை மரணமிலாப் பெருவாழ்வினை தடையின்றி அடைந்து ஞானயுக வாழ்வினை பெற்று சிறப்படைவார்கள்** என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் நகுலன்.

–சுபம்–